# எந்த நாமஜபத்தை செய்ய வேண்டும்?

(Which Deity's Name should we chant ? - Tamil)

## முன்னுரை

சிலர் சில வருடங்கள் தொடர்ந்து நாமஜபம் செய்ய முயற்சிக்கின்றனர். அவ்வாறு செய்தும் அனுபூதி கிடைக்காததால் அவர்களுக்கு 'நாமஜபம் செய்வதில் எந்தப் பலனும் இல்லை' எனத் தோன்றுகிறது. ஆன்மீகத்தின் மீதுள்ள நம்பிக்கையை அவர்கள் இழக்கின்றனர். அவர்கள் ஜபித்த நாமஜபத்தில் எந்த குறைபாடும் இல்லை என்பதும் அவர்கள் தேர்ந்தெடுத்த நாமஜபம் அவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஏற்றதல்ல என்பதும் அவர்களுக்கு தெரிவதில்லை. அதனால் அவர்களுக்கு அந்த நாமஜபத்தால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. 'மனிதனுக்கேற்ற இயல்பு, இயல்பிற்கேற்ற ஸாதனை வழி' என்ற ஆன்மீக சித்தாந்தப்படி யார் எந்த நாமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம்.

குரு அல்லது ஆன்மீக ஆசார்யர் அவர்கள் ஏதாவது நாமத்தை எடுத்துக் கொள்ள சொன்னால் அதை பூரண நம்பிக்கையுடன் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அது நமக்கு நன்மை பயக்கும். ஆனால் 'அவ்வாறு கூறுபவர் யாரும் என் வாழ்க்கையில் வரவில்லை என்றால் எந்த நாமத்தை எடுத்துக் கொள்வது?' என்ற கேள்வி எழுவது இயல்பு. அதற்கு இந்த நூலில் வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் 'ஆன்மீக முன்னேற்றத்திற்கு எந்த நாமஜபம் செய்ய வேண்டும்? உடல் உபாதை மற்றும் மன உபாதைக்கு எந்த நாமஜபம் செய்ய வேண்டும்? அசுர சக்தியால் கஷ்டம் ஏற்படும்போது எந்த நாமஜபம் செய்ய வேண்டும்? எந்த நாமஜபம் செய்யக் கூடாது? ஓம் நாமஜபத்தை யார் செய்ய இயலும்?' போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் நாமஜபத்தால் ஏற்படும் மாற்றங்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் நாமஜபத்தை தேர்ந்தெடுக்க முடியும். இந்த நோக்கத்தின்படி இந்நூலின் மூலமாக எல்லோரும் பயன் பெற வேண்டும் என்பதே ஸ்ரீகுரு சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை! – **தொகுத்தவர்**

**குறிப்பு** இந்நூலின் பல இடங்களில் 'ப.பூ. டாக்டர்' மற்றும் 'பராத்பர குரு டாக்டர் ஆடவலே' என வருவது, இந்நூலின் தொகுப்பாளரான 'பராத்பர குரு டாக்டர் ஜயந்த் ஆடவலே' அவர்களைக் குறிக்கும்.

# அட்டவணை


**1. ஈச்வரனின் நிர்குண ரூபத்தின் சின்னமான ஓம் ஜபத்தை, ஆரம்ப நிலையிலுள்ள ஸாதகர்கள் பக்தியுணர்வுடன் செய்வது கடினம் 13**

**2. ஆர்வமுள்ளவர் மற்றும் ஸாதகர் கஷ்ட நிவாரணத்திற்காகவும் ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் செய்ய வேண்டிய நாமஜபம், முத்ரா மற்றும் நியாஸ் 14**

2 அ. ஆர்வமுள்ளவர், 5 – 6 வருடங்களாக குறைந்த நேரத்திற்கு வ்யஷ்டி ஸாதனையும், 2 – 3 வருடங்களாக குறைந்த நேரத்திற்கு ஸமஷ்டி ஸாதனையும் செய்பவராக இருந்தால் அவர் செய்ய வேண்டிய நாமஜபம், முத்ரா மற்றும் நியாஸ் 14

2 ஆ. 5 – 6 வருடங்களாக வ்யஷ்டி ஸாதனையும் 2 – 3 வருடங்களாக ஸமஷ்டி ஸாதனையும் செய்து வரும் ஸாதகர் செய்ய வேண்டிய நாமஜபம், முத்ரா மற்றும் நியாஸ் 38

**3. நோக்கத்திற்கேற்றவாறு நாமஜபம் செய்தல் 44**

3 அ. இச்சை பூர்த்தியாவதற்கு தெய்வங்களின் நாமஜபம் 44

3 ஆ. இயல்பிற்கு ஏற்ப வெவ்வேறு தெய்வங்களின் நாமஜபம் 44

3 ஆ 6. நாடியின் அதிர்வலைகள் 48

3 இ. இந்த்ரியங்களின் காரியங்களை சரி செய்ய அவற்றிக்குரிய அதிஷ்டான தெய்வங்களின் நாமஜபம் 49

3 ஈ. உடல் மற்றும் மன நோய்களை விலக்க பஞ்சதத்துவங்கள் மற்றும் அவற்றின் அதி தேவதைகளின் நாமஜபம் 51

3 உ. அதிருப்தி அடைந்த மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்களி-லிருந்து விடுபட பகவான் தத்தாத்ரேயரின் நாமஜபம் 52

3 ஊ. வாழ்க்கை மேன்மையுற ஜாதகப்படி கூறப்பட்டுள்ள ஒரு தெய்வத்தின் நாமஜபம் 52

**4. எந்த நாமஜபத்தை செய்யக் கூடாது? 53**

4 அ. குருவின் பெயர் (குரு பெயரின் நாமஜபம்) 53

4 ஆ. மஹான்களின் நாமம் 54

**5. சில மஹான்கள், முனிவர்கள் மற்றும் பக்தர்களின் நாமஜபங்கள் 57**

**6. ஸம்ப்ரதாய நாமஜபம் 57**

6 அ. ஸம்ப்ரதாயப்படியும் குறிப்பிட்ட விஷயத்துக்கேற்றபடியும் குறிப்பிட்ட தெய்வங்களின் சிறப்பு நாமங்கள் 57

6 ஆ. சில சம்ப்ரதாய நாமஜபங்கள் 58

6 இ. ஸம்ப்ரதாய நாமஜபத்தின் கட்டுப்பாடுகள் 59

**7. மாநிலம் மற்றும் மொழிப்படியான நாமஜபம் 61**

**8. சில மதங்களின்படியான நாமஜபம் 61**

**9. நாமத்தின் அர்த்தத்திற்கேற்றபடி பரிணாமம் 63**

**10. பல்வேறு நாமஜபங்கள், நம் உடலின் வெவ்வேறு தேஹங்களுடன் ஒத்துப்போகும் விகிதாசாரம் 64**

**11. சில தெய்வங்களின் நாமஜபத்தின் பரிணாமம் 65**

11 அ. உபாஸனை தெய்வங்கள் மற்றும் உபாஸனை செய்யப்படாத தெய்வங்கள் 65

11 ஆ. உச்ச மற்றும் சூத்ர தெய்வங்கள் 66

**12. நாமஜபத்தால் அவ்வப்பொழுது கஷ்டம் ஏற்படுதல் 68**

12 அ. உயர் நிலை தெய்வங்களின் நாமத்தின் சக்தியை தாங்க முடியாமல் போதல் 68

12 ஆ. காயத்ரி மந்திரம் 69

12 இ. பெண்கள் 'ஓம்' சேர்த்து ஜபம் செய்தல் 70

12 ஈ. தீய சக்திகளால் ஏற்படும் கஷ்டம் 70

**13. நாமஜபத்தால் ஏற்படக் கூடிய தீமை மற்றும் அதற்கான உபாயம் 70**

---

குறிப்பு – ஆன்மீக நிலை : ஒவ்வொரு மனிதனிடமும் ஸத்வ, ரஜ மற்றும் தம ஆகிய முக்குணங்கள் உள்ளன. எப்பொழுது ஒருவர் ஸாதனை செய்ய, அதாவது இறைவனை அடைய முயல்கிறாரோ அப்பொழுது அவரிடம் ரஜ-தம தன்மை குறைய ஆரம்பிக்கின்றன மற்றும் ஸத்வ குணம் மோலோங்க ஆரம்பிக்கிறது. ஒருவரிடமுள்ள ஸத்வ குணத்தை பொருத்து அவரின் ஆன்மீக நிலை அமைகிறது. ஸத்வ குணம் எந்த அளவு அதிகமாக உள்ளதோ அந்த அளவு ஆன்மீக நிலையும் அதிகமாக இருக்கும். சாதாரண மனிதனின் ஆன்மீக நிலை 20% ஆகும். மோக்ஷமடைந்த மனிதனின் ஆன்மீக நிலை 100% ஆகும். அந்நிலையில் அவர் முக்குணங்களையும் கடந்தவராகிறார்.